112893

தஞ்சாவூர் ஜில்லா மன்னார்குடி
தாலுகா
பூவனூர் என்று விளங்கும்
புஷ்பவன க்ஷேத்திர
வரலாறு


Q23:38.21193
N47
112893

342

உ

சிவமயம்

புஷ்பவனநாதர் துணை.

MADRAS

தஞ்சாவூர் ஜில்லா மன்னார்குடி தாலுகா

பூவனூர் என்று விளங்கும்

# புஷ்பவன க்ஷேத்திர வரலாறு.

இஃது

சென்னை இந்துமதபரிபாலன போர்டாரவர்கள் சுற்றறிக்கைப்படி

பூவனூர் பெருநிலக்கிழாரும் தரும சீலரும்

திருக்கோயில் மானேஜிங் டிரஸ்டியுமாகிய

திரு. P. சுப்பையா முதலியார் அவர்கள்

கருத்திற்கிணங்க

மன்னார்குடி, தமிழ்ப்பண்டிதர்

ப. இராமநாத பிள்ளையால்

எழுதப்பெற்று

பூவனூர்

ஸ்ரீ சதுரங்கவல்லபநாதஸ்வாமி தேவஸ்தானத்தாரால்

வெளியிடப்பட்டது

இரண்டாவது பதிப்பு.

...ரதி பிரஸ், மன்னார்குடி.

1947.

Q23:38·2192 p

N47

112893

உ

சிவமயம்.

## முன்னுரை.

சிவதலம்பரவு திருமிகவுடைய பெரியோர்களே!

பூவுலகின்கண் விளங்கும் ஆயிரத்தெட்டு சிவ தலங்களுள் சைவ சமயாசார்யர்களால் பாடல் பெற்றன இருநூற்றெழுபத்து நான்கு தலங்களாகும். சோழவள நாட்டில் நூற்றுத்தொண்ணூறு தலங்களுண்டு. இவை களில் காவிரிக்குத்தென்கரையில் விளங்கும் நூற்றிருபத் தேழு தலங்களில் இப்பூவனூர் ஒன்றாகும். போற்றுவா ரற்றமையால் அனேக தலபுராணங்கள் மறைந்துபோயின. திருவருளால் இத்தலபுராணம் சிவபக்தர்கட்குச் செல்வ மாய் நிலைத்துள்ளது.

சைவநெறி முன்போலல்லாது சிறிதே விளங்கி வரும் நிலையில் சென்னை இந்துமத பரிபாலன போர்டா ரவர்கள், தலபுராணங்கள் பலருக்கும் பயன்படும் நிலையில் எளிய வசன நடையில் வெளியிடச் செய்துவரும் செயல் பெரிதும் போற்றத்தக்கதாம். இவ்வரிய பணியைப் பெரிதும் கவனித்து வரும், டி போர்டு கமிஷனர் இராவ்பகதூர் இராமச்சந்திர செட்டியாரவர்களுக்கு சைவ உலகம் பெரிதும் கடப்பாடுடையது.

இத்தலம், சைவ பரம்பரையினராய், தொண்டை மண்டல முதலியாரவர்கள் குலத்திலுதித்த சிவபக்த சிரோமணியும் இத்தலவாசியுமாகிய ராஜு முதலியா ரவர்களால் சிறந்த திருப்பணி கைங்கர்யம் செய்யப் பெற்றுக் கும்பாபிஷேகமும் நடைபெற்றதாகும். அவர் களது உடன்பிறந்தாராகிய பஞ்சனதமுதலியாரவர்களது

அரும்பெறற்புதல்வராகிய திருவாளர் ப. சுப்பையா முதலியாரவர்களும் பஞ்சாயத்தாராக, தம் முன்னோர்களைப் போலவே சிவாலய சிவபூசை நியமங்களைத் தவறாது கவனித்துச் சிவதரிசனமும் செய்துவரும் மேன்மை போற்றத்தக்கதாம். அத்தகையார் அன்பு காரணமாக, ஒன்றுக்கும்பற்றாத என்னை இவ்வரிய பணியிலீடுபடுத்திய மைக்கு எழுமையுங் கடப்பாடுடையேன்.

இவ்வெளியீட்டில் காணும் பிழைகளைப் பொருட்படுத்தாது, சிவசரிதத்தையே பொருளாகக் கொண்டு அன்பர்கள் போற்றுவார்கள் எனும் துணிபு பற்றியுள்ளேன்.

எனக்குத் தோன்றாத் துணையாயிருந்தருள்செய் பூவனூர்ப் புனிதன் திருவடிகளை மன, மொழி, மெய்களால் வழுத்தும்,

ப. இராமநாதன்.

உ

சிவமயம்.

புஷ்பவனநாதர் துணை.

தஞ்சாவூர் ஜில்லா, மன்னார்குடி தாலூகா

பூவனூர் என்று விளங்கும்

# புஷ்பவன க்ஷேத்திர வரலாறு

14 NOV 1947
MADRAS

திருச்சிற்றம்பலம்.

திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்

திருக்குறுந்தொகை

பூவனூர்ப் புனிதன்றிரு நாமந்தான்
நாவினூறு நூறுபிர நண்ணினார்
பாவமாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்களாவரே.

திருச்சிற்றம்பலம்.

இஃது

சென்னை இந்துமதபரிபாலன போர்டாரவர்கள் சுற்றறிக்கைப்படி

பூவனூர் பெருநிலக்கிழாரும் தருமசீலரும்

திருக்கோயில் மானேஜிங் டிரஸ்டியுமாகிய

திரு. P. சுப்பையா முதலியார் அவர்கள்


கருத்திற்கிணங்க

மன்னார்குடி தமிழ்ப்பண்டிதர்

ப. இராமநாத பிள்ளையால்

எழுதப்பெற்றது.

TAMIL NADU ARCHIVES LIB
112893
EGMORE MADRAS



திருக்கோயில் முன்புறம்.

உ
சிவமயம்

## பூவனூர் என்று விளங்கும்

# புஷ்பவன க்ஷேத்திர வரலாறு.

---

## திருப்பூவனூர் கிராம அமைப்பு.

ஜில்லா: தஞ்சாவூர்.

தாலூகா: மன்னார்குடி.

ரெயில்வே ஸ்டேஷன்: நீடாமங்கலம்-மன்னார்குடிப் பிரிவில் ராஜப்பையன் சாவடியிலிருந்து சுமார் 1 மைலில் உள்ளது.

ரஸ்தா வசதிகள்: நீடாமங்கலமிருந்து மன்னார்குடி போகும் கப்பி ரஸ்தாவில் உள்ளது. பஸ் போக்குவரத்து வசதியுள்ளது.

நதிகள்: கீழ்புறம் ரஸ்தா ஓரமாக க்ஷீர நதி என்ற பாம்பணி நதி ஓடுகிறது.

குளங்கள்: (1) க்ஷீர புஷ்கரணி, (2) கிருஷ்ண குஷ்டஹாரம், (3) தர்ம புஷ்கரணி, (4) கம்பி புஷ்கரணி ஆக நான்கு தீர்த்தங்கள் உண்டு. 1, 2 ஸ்ரீ புஷ்பவனேஸ்வரர் ஆலயத்திற்கு முறையே எதிரிலும், தென்மேற்கிலும், 3, 4 ஸ்ரீராமர் ஆலயத்திற்கு முறையே தென்மேற்கிலும், கிழக்கிலும் உள்ளன.

தீர்த்த விசேஷம்: கிருஷ்ண குஷ்டஹாரம், எனச் சொல்லப்படும் தீர்த்தத்தில் அமாவாசை, பௌர்ணமி, சூரிய, சந்திரகிரஹணங்கள், ஞாயிற்றுக்கிழமை, வெள்ளிக்கிழமை, அர்த்தோதய, மகோதய புண்யகாலங்கள் இவைகளில் செய்கிற சற்கருமங்களெல்லாம் மிகுந்த நன்மையைத் தரும்.

ஸ்தலங்கள்: ஸ்ரீ சதுரங்கவல்லபநாதசுவாமி என வழங்கும் ஸ்ரீ புஷ்பவனேஸ்வரர் சிவாலயமும், ஸ்ரீராமர் விஷ்ணு ஆலயமும் இருக்கின்றன. இரண்டு ஸ்தலங்களுக்கும் வடமொழியில் சேர்ந்த ஸ்தலபுராணம் ஒன்றுண்டு. ஷை சிவஸ்தலத்திற்கு அப்பர் சுவாமிகளால் பாடப்பெற்ற பதிகம் உண்டு. திருஞானசம்பந்த சுவாமிகள் வந்ததாக பெரியபுராணத்தில் ஆதாரம் இருக்கிறது.

கிராம தேவதைகள்: ஸ்ரீ கைலாசநாதர், ஸ்ரீ அங்காளம்மன், ஸ்ரீ காளியம்மன்; ஸ்ரீ ஐயனார், ஸ்ரீ ஆஞ்சனேயர் ஆக ஐந்து கோயில்கள் உண்டு.

உட்கோயில்: ஸ்ரீ சதுரங்கவல்லபநாதசுவாமி ஆலயத்தில் துவஜஸ்தம்பத்திற்கு எதிரில் வடக்கு முகமாய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சாமுண்டீஸ்வரி சன்னதியில் 'திருநாவுக்கரசு நாயனார்' தேவாரம் நான்காவது பாடல் 'பூவனூர் புகுவார் வினை போகுமே' என்ற வாக்கியப்படி ஞாயிற்றுக்கிழமைதோறும் சகல விஷங்களுக்கும் வேர் கட்டுதலும் பிரதிவெள்ளி செவ்வாயிலும் சங்கடதோஷம் முதலானவைகளுக்குத் தோஷ நிவர்த்தியும் செய்யப்படுகிறது. அவரவர்கள் மனோபீஷ்டங்களும் பிரார்த்தனை செய்துகொண்டபடி நிறைவேறி வருகிறது.

---

உ

சாட்சி விநாயகர் துணை.

கணபதி துதி.

பூவளரும் புட்பவன சாட்சிவிநாயகன் செவ்வேள் நந்தி
தேவளரும் புட்பவன நாதனற்கற் பகவல்லி திகழுமோகொள்
மாவளரு மிராசராசேசுவரி யவள் மணிப்பெண் பதம் வணங்கி
நாவளருந் தமிழ்மொழியி னத்தலத்தின் மகிமைதனை நவிலலுற்றேன்.

இட அமைப்பு: தஞ்சை ஜில்லா, மன்னார்குடி தாலுகாவில் பூவனூர் கிராமம், நீடாமங்கலம் ஜங்ஷனிலிருந்து மன்னார்குடி வரும் வழியில் 2 மைலிலும், ராஜப்பையன் சாவடியிலிருந்து 1 மைலிலுமுள்ளது மோட்டார் வசதியுண்டு. நீடாமங்கலத்திலிருந்து மன்னார்குடி வரும் வழியில் (17-2 மைலில்) இறங்கி பாம்பணியாற்றைக் கடந்து 2 பர்லாங் தூரத்திலுள்ளது. மனிதர்கள் கடந்து செல்லத்தக்க பாலம் பாம்பணி நதிக்குண்டு. தெற்கே ராயபுரம் போகும் பாலத்திலிருந்து தனியாக சாலையும் உண்டு.

ஊர் சிறு கிராமம். இரண்டு பகுதிகளுடையது. கீழ்ப்பகுதியில் கோயிலும் நான்கு வீதிகளும் மேல் பகுதியில் அக்ரகாரமும் ஸ்ரீராமர் கோயிலுமுண்டு.

கோயில் அழகிய கோபுரத்துடனும் இரண்டு பிரகாரங்களுடனும் விளங்குகிறது.

மூர்த்திகளின் பெயர்: புஷ்பவனநாதர், சதுரங்க வல்லபேசுரர். அம்பிகை கற்பகவல்லி, ராஜராஜேசுவரி. பரிவார தேவதைகளில் சர்வ முகூர்த்தங்களும் உண்டு. சாமுண்டீஸ்வரி பிரசித்தமானது.

தீர்த்தம்: 1. பாம்பணி நதி; 2. க்ஷீர நதி அல்லது க்ஷீர புஷ்கரணி (சந்நிதிக்கு எதிரிலும்) கிருஷ்ணகுஷ்டஹர தீர்த்தம் (தென்மேற்கு மூலையிலும்) உண்டு.

தல விருக்ஷம்: பலா.

## மூர்த்திகளின் பெயர் முதலியன.

மூலஸ்தானம்: புஷ்பவனநாதர், சதுரங்கவல்லபநாதர்.

முன் மண்டபம்: நடராஜா, சிவகாமி.

எழுந்தருளுமூர்த்திகள்: 1. கணேசர்; 2. சுப்பிரமணியர்; 3. வள்ளி; 4. தெய்வானை; 5. பாலசுப்பிரமணியர்; 6. சந்திரசேகரர்; 7. பிரதோஷமூர்த்தி; 8. சண்டிகேசுரர்; 9. பிட்சாடனர்; 10. சிறுதொண்டர். நாயன்மார்களில் சுந்தரர், அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர்.

அம்பிகை: ராஜராஜேசுவரி
சுக்ரவாராம்பிகை: சாமுண்டியம்மன்
அஸ்திரதேவர், சேர மகாராஜா
பள்ளியறை உபயநாச்சியார்

பிரகாரங்கள் 2. உட்பிரகாரத்தில் கணபதி, தெட்சணாமூர்த்தி, லட்சுமி நாராயணர், அண்ணாமலைநாதர், விசேஷலிங்கம், பசுபதீசர், சுப்ரமண்யம், வள்ளி தெய்வானை, சண்டேசுரர்.

நவக்ரகங்கள்: சூர்யன், பைரவர்,
1. ராஜராஜேசுவரி, 2. கற்பகவல்லி.

துவஜஸ்தம்பத்திற்குத் தெற்கில் சாமுண்டீஸ்வரி வடக்கு முகமாக எழுந்தருளியிருக்கிறது. இந்தச் சந்நிதியில் சர்வ விஷரோக நிவர்த்தி ஆகிறது. எலி கடிக்கு வேர் கட்டிக்கொண்டு பிரார்த்தனை செலுத்துவதில் நிவர்த்தியாவது யாவருமறிந்ததே. சங்கா தோஷ நிவர்த்தியாகிறது. தற்காலம் அம்பிகை மிகப் பிரசன்ன விசேஷத்தோடு விளங்கி பக்தர்கள் மனோபீஷ்டங்களைப் பூர்த்தி செய்துவருவது தெரிசிக்கத் தக்கது.



## புராண வரலாறு

எழ்தலம் புகழ் சோழநாட்டில் ஆலங்குடிக்கும் விண்ணாற்றுக்கும் தெற்கிலும், செண்பகாரண்யத்துக்கு வடக்கிலும், பாம்பணியென வழங்கும் திருப்பாதாளேச்சுரத்துக்கு வாயு திக்கிலும், கோயில்வெண்ணி க்ஷேத்ரத்துக்கு அக்னி மூலையிலும் பாம்பணி நதியின மேல்கரையில் புஷ்பவனம் - பூவனூர் என்று வழங்கும் சிவதலம் ஒன்றுண்டு. அது தன்னையடையப்புகுந்தாரது பாவங்களைப்போக்கி யவர்களது கருத்தை நிறைவேற்றி எல்லாச் செல்வங்களையுங் கொடுத்து முடிவில் சிவஞானத்தையும் அளிக்கும் பெருமையுடையதாகும். இந்தத் தலத்தில் யமவாதனையில்லை. அங்கு சந்நிதிக்கு முன்னே க்ஷீர நதியும் கன்னி மூலையில் கிருஷ்ணகுஷ்டஹர தீர்த்தமும் இருக்கின்றன. இந்தப் பூவனூரில் சிவபெருமான் நேரில் கட்டளையிட்டபடி நந்தி முதலிய சிவகணங்களால் நிறுவிப் பூசித்த சிவலிங்கம் விளங்கும். கற்பகவல்லியம்மையும், ராஜராஜேசுவரியம்மையுமாக தேவிகள் இருவர் சந்நிதியுமுண்டு.

இவ்வனத்துக்கு வடக்கேயுள்ள புன்னைமரச் சோலையில் இராமபிரான் சடாயுவின் விண்ணப்பத்துக்கிணங்க சீதா. லட்சுமணர் முதலியவர்களுடன் எழுந்தருளியிருக்கிறார். சிவாலய விஷ்ணு ஆலயத்தோடு கூடிய தலம் பாஸ்கர க்ஷேத்ரமென்று கூறப்படும். இவை சிறந்த தலமாகும்.

ரைவதமனுவின் கால இறுதியில் கடலால் உலகம் பெரிதும் அழிந்து பிறகு சாக்ஷுஷமனுவின் காலத்தில் தேசமெல்லாம் செழித்து உலகம் முன் போலாயிற்று.

அப்போது சிவபெருமான திருவிளையாடலாக உமாதேவியோடு ரிஷபாரூடராய் பதினெண் கணங்களுஞ் சூழ எழுந்தருளினார். இந்தப் பூவனூருக்கு ஆகாய வழியே வந்தபோது இதுவரை எங்கும் இல்லாத சிறந்த வாசனை வீசியது. உடனே வாசனை வரும் இடத்தை நோக்கி வந்து இந்தப் புஷ்பங்கள் நிறைந்த பூவனூரில் தானும் பார்வதியும் பரம திருப்தியடைந்தவர்களாய்த் தங்கினார்கள். இதுகண்ட, சிவ பூசையில் பரம பக்தியுடைய கணங்கள் "உமக்குப் பிரியமான இந்த மலர்களால் உம்மைப் பூசிக்க விரும்புகிறோம்" என்று விண்ணப்பித்தார்கள். சிவனும் சம்மதித்து நமது லிங்கத்தை வைத்துப் பூசியுங்கள். அதுவரை நாம் உமக்கு முன்னே எழுந்தருளியிருப்போம் என்று ஆகாயத்திலே நின்றருளினார்.

உடனே பூமியைச் சமப்படுத்திக் கடம்ப மரங்கள் அடர்ந்த இடத்தில் சிவலிங்கத்தைத் தாபித்து அபிஷேகம், ஆராதனை செய்து பலவாறு தோத்தரித்தார்கள். அவ்வாறே அம்பிகையையும் பூசித்தார்கள். இந்த உத்தமமான தலத்தை விட்டுப் பிரிய மனமில்லாமலும், ஆகாயத்திலுள்ள சிவபெருமானை விட்டுப் பிரியமுடியாத பக்தியுடையவர்களாய்ப் பலவாறு தோத்தரித்தார்கள். இவைகளால் அதிக திருப்தியடைந்த சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளியது. "நீங்கள் இப்போது பூசித்த லிங்கம் எல்லாத் தலத்திலுள்ள சிவலிங்கங்களைவிட மிக மிகச் சிறந்தது. எனக்குப் புஷ்பங்கள் பிரியமானதுபோல் இது என் குமாரனாகிய முருகனுக்கும் உகந்த கடம்பவனமாயிற்று. மேலும் நமது உமாதேவிக்கும் பிரியமான பல புஷ்பங்களும் நிரம்ப இருப்பதால் இது மிக விசேடமான தலமாயிற்று. வேறு தலங்களில் என்னையடைவதற்



கும் அருளைப் பெறுவதற்கும் பிரம, விஷ்ணு ஆகியோர் சிவலிங்கங்களை வைத்துப் பூசித்தார்கள். நாமே விரும்பி நேரே இருந்து நிறுவிய சிவலிங்கமானதால் இது மிக மிகச் சிறந்ததாகும்".

இந்தத் தலத்தை நினைப்போர், தரிசிப்போர் முதலியவர்களது பலனைக் கூறி முடியாது.

## தீர்த்த மகிமை.

கிருஷ்ணகுஷ்டஹர தீர்த்தம்: கிருதயுகத்திலே சோழநாட்டில் சித்திரபுரி பட்டணத்தில தருமவர்மன் என்று ஒரு அரசனிருந்தான். அவன் சிறந்த சிவபக்தன், நல்ல நீதிமான். முற்பிறப்பில் செய்த தீவினைப் பயனாய் கருங்குஷ்டநோய் பிடித்தது. எல்லாவிதமான வைத்தியத்தாலும், தான தருமங்களாலும் விலகாது, முற்றிவரலாயிற்று. சிவனருளால் ஒருகால் இரேணுகர் என்னும் முனிவர் அவரது சபைக்கு வர நேர்ந்தது. முறைப்படி அவரை வணங்கித் தனது குறையை நிவர்த்தி செய்ய ஏதாவது ஒரு வழி சொல்லியருளவேணுமென்று பிரார்த்தித்தார்.

அவர் இத்தகைய சிவபக்தனுக்கு இப்படி நோய் வரக் காரணமென்னவென்று தம் ஞானப்பார்வையால் உணர்ந்து முற்பிறப்பின் செயலைக் கூறுவாராயினார்:— "ஏ அரசே, நீ மூன்றாம் பிறவியில் கௌட தேச அரசனாகியும் சிறந்த தர்மகர்த்தாவாகவுமிருந்தாய். அப்போது நல்ல வேதவித்தும் சிவபக்தியுமுடைய பிராமணர் ஒருவர் வறுமை நோயாலும் குட்ட நோயாலும் பிடிக்கப்பட்டவராய் உன்னையடைந்து யாசித்தார். அவருக்கு

உடலில் இருந்த குட்டநோய்ப் புண்ணிலிருந்து கெட்ட நாற்றம் வீசியது. நீ கோபத்தையடைந்து இத்தகைய கொடிய நோயுடைய நீர் ராஜசபைக்கு வரலாமா என்று கேட்க அவர் தன் வறுமையால் வந்ததைப் பணிவுடன் கூறியும் அவரைப் பலவாறு நிந்தித்து ராஜசபையை விட்டுத் துரத்தினாய். அப்படி ஒரு சாமான்ய மனிதனும் செய்யமாட்டான். பிச்சை கேட்போருக்கு இல்லை என்னலே பாவம். அதிலும் ஒரு தவசி. தாங்கமுடியாத வறுமை, குட்டமாகிய இரு பெரிய நோயால் வருந்துகிறவனுக்கு உதவி செய்யவில்லையென்றால் பெரிய பாவம் ஓர் அரசனாகவிருந்து தீவினைப்பயனை யனுபவிக்கிறவனுக்கு ஆதரவு செய்யாமல் சபையில் அவமானம் செய்தனுப்பிய பாபம் மிகக் கொடிது. அதனால் உனக்கு அந்த நோய் பிடித்தது. இது சாமான்யமாய்த் தீராது. மூர்த்தி தலம், தீர்த்தம் எல்லாவற்றிலும் சிறந்த ஒரு சிவதலத்தை யடைந்தாலல்லது தீராது" என்றார். அரசன் மறுபடியும் நீரே அந்தத் தலத்தையும் சொல்லியருள வேணுமென்று பிரார்த்திக்க முனிவர், சோழநாட்டிலுள்ள பூவனூர் எனும் தலத்தைத் தியானித்தாலும் அடைந்தாலும் சர்வ வினைகளும் தீரும் என்றருளியவுடனே அவரை மறுமுறை வணங்கி உடனே தலயாத்திரைக்குப் புறப்பட்டார். வழியில் உள்ள எல்லாச் சிவதலங்களையும் தெரிசித்துக் கொண்டு சோழநாட்டையடைந்து பாம்பணி நதியின் மேல்கரையிலுள்ள பூவனூரையடைந்தார். கோயிலின் தென்மேற்குத் திசையில் உள்ள தீர்த்தத்தில் நீராடி சிவ தெரிசனம் செய்து மகேசுர பூசை முதலியனவும் நடத்தி வந்தார். எந்நாளும் உடலில் உள்ள குட்டநோயின் அரிப்பு முதலிய துன்பங்களால் நன்றாய் உறங்காத அரசன் தன்னையறியாது நன்றாய் உறங்கினார். இரண்டாம்




நாளும் இத்தீர்த்தமாடியதால் உடற்புண் நோய் நீங்கியது. மூன்றாம் நாள் புண் காய்ந்து வருவதைக்கண்டு பரமானந்தங்கொண்டு தினமும் ஆறு காலமும் இத்தீர்த்தத்திலாடிச் சிவதெரிசனமும் செய்தார். ஆறாம் நாளில குஷ்டமிருந்த சின்னமில்லாமல் மறைந்து அதிகமான ஒளியுடனும் நற்கந்தத்துடனும் சரீரம் விளங்கியது. யாவரும் பரம ஆச்சரியமடைந்து தீர்த்த மகிமையையும தல மகிமையையும் சிவ தெரிசன பலனையும் கொண்டாடினார்கள். கருஙகுட்ட நிவர்த்தி செய்தமையால் கிருஷ்ண குஷ்டஹர தீர்த்தமெனப் பெயர் பெற்றது. உடனே அரசன் சிவாலயத்தைப் புதுப்பித்து மாசி மாதத்தில் பிரமோற்சவம் செய்து மகநட்சத்திரங்கூடிய பௌர்ணமியில் தீர்த்தவாரியும் நடத்தி சிவபெருமானை வழிபட்டார். புஷ்பவனநாதர் சிவலிங்கத்தினின்றும் வெளிப்பட்டுத் தரிசனம் தந்து தான் மற்ற தலங்களைக்காட்டிலும் மிக விரும்பிய இடமாதலால் இத்தலத்தை யடைந்தோர் யாவருக்கும் நிறைந்த அருளைச் செய்வோம். சர்வ நோய்களும், பாபங்களும், வறுமைகளும் நீங்கி எல்லா நலங்களையும் பெற்றுத் தமது திருவடிகளையும் அருளுவோம் என்று திருவாய் மலர்ந்தருளி சிவலிங்கத்தில் மறைந்தருளினார்.


## புஷ்பவனநாதர், சதுரங்கவல்லபநாதரான திருவிளையாடல்

தமிழ் வளர் பாண்டிநாட்டில், திருநெல்வேலியில் வசுஷேணன் என்னும் அரசன் ஒருவன் இருந்தான். அவன் மனைவி சாந்திமதியோ கற்பிற் சிறந்தவள். இருவரும் சிறந்த சிவபக்தர்கள். தரும நெறியிலே தவறாது

ஒழுகுபவர். இவர்கட்கு எல்லாப்பேறும் கிடைத்தும் புத்ரப்பேறில்லை. ஒரு நாள் சாந்திமதியம்மை சிவபெருமானிடம் முறையிட்டு எப்படியாவது தனக்குப் புத்ரப்பேறருள வேணுமென்று கதறினாள். புத்ரப்பேறு யாவர்க்கும கிடைப்பதல்ல, இவர்களுக்கு அந்த நல்வினையிருந்தாலல்லாமல் கொடுப்பது விதியல்ல என்று உமையம்மையிடம் சிவன் கூற கருணை வடிவமான பார்வதி தேவியார் எப்படியும் அவள் மனமகிழும்படி அருள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். அப்படியானால் நீ புத்ரியாயவதாரம் செய். உம்மை வந்து நாமே மணம் செய்தருளுவோம் என்றருளினார். உனக்குப் பணிவிடைக்குச் சப்தமாதர்களுள் சிறந்த சாமுண்டியிருக்கட்டும் என்றருளினார் ஒரு நாள் அரசனும் அரசியும் தாமிரபரணியில் நீராடும்போது பார்வதி தாமரைப் பூவின்மேல் சங்குருவாகத் தோன்ற அதை அரசன் கையிலேந்திக் கரையேறினார். அது ஒரு அற்புதமான பெண்குழந்தையாகக் கண்டு சிவனருளை மனதிலே கொண்டு, அளவிலா ஆனந்தத்திலாழ்ந்து மனைவி கையிற் கொடுக்கவே அக்கற்புக்கரசியும் தன் தனங்களில் பால் பெருக, உமையம்மைக்குக் கொடுத்தருளினார். அளவிலாத சிறப்புகளுடன் குழந்தையைச் சிவசந்நிதிக்கு எடுத்துச் சென்று பிறகு அரண்மனைக்குக் கொண்டுபோனார்கள். ராஜாராஜேசுவரியென்று பெயரிட்டார்கள். சாமுண்டியும் ஒரு செவிலித்தாயாக வந்து அம்பிகையை வளர்த்து வந்தாள். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகக் குழந்தை வளர்ந்து பரம மங்கள வடிவியாய் எல்லாக் கலைகளையு முணர்ந்து பெண்களுக்குரிய விளையாடல்களில் சிறந்தவளானாள். இவளைச் சதுரங்கத்தில் யாரும் வென்றதேயில்லை. இப்படிப் பத்து வயதானவுடன் இப்பெண்ணுக்குத்



திருக்கோயிலும், க்ஷீரபுஷ்கரணியும்.



ஸ்ரீ சாமுண்டீசுவரி சந்நிதி

தகுந்த நாயகனை எங்கே காண்பது என்ற கவலையில்
யாவரும் மூழ்கினார்கள். ஒரு அரசகுமாரனாவது தகுதி
யுடையவனாகக் கிடைக்கவில்லை. பிறகு, சதுரங்கத்தில்
எவன் ஜெயிக்கிறானோ அவன் நாயகனாவான் என்று
விளம்பரப்படுத்தினார்கள். அப்போதும் ஒருவரும்
ஜெயிக்கவில்லை. அரசன் மனக்கவலை யதிகரித்திருந்தான்
அரசனிடம் வந்த ஒரு தவசி சிவதல யாத்திரை செய்தால்
உங்கள் எண்ணம் நிறைவேறுமென்று கூறக் கேட்டார்.

உடனே சிவனைத் தியானித்தவர்களாய், குடும்பத்
துடனும் மந்திரி முதலியவர்களுடனும் வடக்கு நோக்கி
எல்லாத் தலங்களையும் தெரிசித்துச் சோழநாட்டை
யடைந்தார்கள். பல தலங்களையும் தெரிசித்து இந்த
மகாதலத்தையடைந்தார்கள். விசேஷமான சகுனங்கள்
காணப்பட்டன. அதனாலே தங்கள் எண்ணம் கைகூடுமிட
மென்று ஆனந்தமடைந்து பாம்பணியாறு, க்ஷீர நதி,
கிருஷ்ணகுஷ்டஹர தீர்த்தங்களில் முறைப்படி தீர்த்த
மாடிச் சிவதரிசனம் செய்து அரசன் தன் இருக்கையி
லிருந்தான். அப்போது சிவபெருமான் சித்த வேடத்த
ராய் எழுந்தருளி அரசனிடம் பல சாஸ்திரார்த்தங்களைப்
பற்றிப் பேசிப் பிறகு தான் சதுரங்க முதலியவற்றிலும்
வல்லவரென்று கூறினார். உடனே ராஜ கன்னிகையான
ராஜராஜேசுவரியுடன் சதுரங்கமாடி ஒரு நாளும் தோற்
காத அம்பிகையை சித்தவேடமூர்த்தி ஜெ[illegible]தார்.
அரசன் தான் பெண்ணுக்கு வரந்தேடி வந்த விபரத்தையும்
சதுரங்கத்தில் வல்லவராய் இருப்பவருக்குப் பெண்
கொடுப்பதாய்ச் செய்த விரும்பத்தையும் சொல்லி
யருளினார். சித்தமூர்த்தியின் பெயர், சாதி, குலம் முதலிய
வற்றைக் கேட்க அவரோ ஒரு நாமம், ஒருருவம், ஒரு

112893
MADRAS

குலம் இல்லாமையையும் தாயுமிலாத தந்தையுமிலாத தனியன் என்றருளினர் இவ்வுண்மை யறியாது அரசன் மயங்கினர். ராஜராஜேசுவரியே இத்தன்மையானவர் பரமசிவனை என்றும் முன் விளம்பரப்படுத்தியபடி யவருக்கே மணமுடிக்க வேணுமென்றும், தானும் அவரை மனதால் வரித்துவிட்டபடியால் திருமணம் செய்ய வற்புறுத்தினள். அரசன பயந்து, வந்த மூர்த்தியை உண்மையுரைக்க வேணுமென்று பணிய, சிவபெருமான் காட்சி கொடுத்து முன் வரலாற்றைக் கூறிக் திருமணம் நடத்த உத்தரவிட்டார். உடனே பரவசப்பட்டவனும் சர்வதேச ராஜாக்களுக்கும் திருமண ஓலை போக்கி எல்லாச் சிறப்புகளுடனே ராஜராஜேசுவரியை புஷ்பவனநாதருக்குத் திருமணம் செய்து களித்தான். அம்பிகையைச் சதுரங்கத்தால் வென்றமையால் சதுரங்க வல்லபேசுரர் எனும் காரணப் பெயரும் உண்டாயிற்று.

அத்தகைய திருமணக்கோல மூர்த்தியைப் பாண்டி மன்னனும் சாந்திமதியும் நமஸ்கரித்து இந்த திருக்கல்யாண மஹோற்சவத்தை வருடந்தோறும் சர்வ பக்தர்களும் கண்டு களிக்க நடத்தவும், ராஜராஜேசுவரியும் சாமுண்டியும் தனிச் சந்நிதிகளிலே தெய்வமாக விளங்கவும் இத்தலத்தை யடைந்த மாத்திரத்திலே சர்வ மங்களமும் யாவர்க்கும் உண்டாகும்படி வரங்களைக் கேட்கச் சிவபெருமான் அப்படியே அருள் செய்தார்.

---



## 1356ம் பசலி வரவு செலவு விபரம்.

நஞ்சை நிலம் 173 ஏ. 84 செ.
புஞ்சை நிலம் 37 ஏ. 20 செ.

| | ரூ. அ. பை. |
|---|---|
| **வரவு.** | |
| குத்தகை வருமானம் | |
| நஞ்சை கலம் 2722-8-2க்கு | 8,168—1—0 |
| ,, புஞ்சை மனை வகையறா | 632—3—3 |
| காணிக்கை, கட்டளை, உண்டி முதலியன | 1,104-14-11 |
| மாதோற்சவ, வருடோற்சவ ஏறுபடி | 173-12—0 |
| மோகினி | 201-14—3 |
| வட்டி வருமானம் | 200—4—0 |
| இதர சில்லரை வகையறா | 808—2—6 |
| ஆக, கூடுதல் | 11,289—3-11 |
| **செலவு.** | |
| சிப்பந்தி சம்பளம், ஆபீஸ் செலவு | 2,117—8—0 |
| நித்தியப்படி பூஜை செலவு | 1,935—5—8 |
| உற்சவாதிகள் செலவு | 1,014—5-11 |
| கிராம சம்பந்தமான செலவு | 189—7-11 |
| கட்டிட ரிபேர் செலவு | 19-14—0 |
| ராஜாங்க கிஸ்தி | 1,562-11—0 |
| போர்டு, ஆடிட் பீஸ் | 475-14—0 |
| இதர சில்லரைச்செலவுகள் | 243—0—6 |
| ரிசர்வ் பண்டு | 500—0—0 |
| ஆக, கூடுதல் | 8,058—3—0 |
| நெல் இருப்பு | 3,231—0-11 |
| ஆக கூடுதல் ரூ. | 11,289—3-11 |

## விசேஷ ஆபரணங்கள்.

சுவாமிக்கு வெள்ளி நாகாபரணக்கோளகை.

அம்பிகை கற்பகவல்லி, ராஜராஜேசுவரி, சாமுண்டீஸ்வரி சந்நிதிக்குப் பூரண வெள்ளிக் கவசம். சுப்பிரமணியருக்கும் பூரண வெள்ளிக் கவசம் உண்டு.

## அர்ச்சனைச் சீட்டு விபரம்.

| | |
|---|---|
| அஷ்டோத்ரம் | 0—1—6 |
| சகஸ்ரநாமம் | 0—5—0 |
| சாமுண்டியம்மன் பிரார்த்தனை விஷகடி | 0—6—0 |
| முடிச் சீட்டு | 0—5—0 |
| அபிஷேகச்சீட்டு (5 ரூபாய் திட்டத்திற்கு) | 0—4—0 |

## இத்தலத்தில் நடக்கும் இதர விசேட தருமக் கட்டளை விபரங்கள்.

1. வேத பாடசாலை திரு P. சுப்பையா முதலியாரவர்கள் குடும்பத்தினரால் சுமார் எட்டு வேலி நஞ்சை வருமானத்தைக்கொண்டு ஒரு உபாத்தியாயரும் பத்து பிரமசாரிப் பையன்களும் தரும முறையில் சாப்பாடு முதலிய இதர சவுகரியங்களுடன் யஜுர் வேத பாடம் நடந்து பிரதிதினமும் கோயிலில் பாராயணமும் பிரமோற்சவ முதலிய காலங்களில் கோஷ்டியும் நடந்து வருகிறது. ஷையாரால் சத்திரத்தில் அன்னதானமும் நடைபெறுகிறது.

2. தேவார பாராயணமும் நடைபெறுகிறது.

3. காரைக்குடி பனா. மெ. மெ. பழநியப்ப செட்டியாரவர்களால் திருநந்தவன கைங்கர்யம் சிறப்பாக நடந்து வருகிறது.



4. ஷையாரால் பசுமடம், சுமார் 30 பசுக்கள் வரை வைத்து அதற்கான இதர சிப்பந்திச் செலவுகளுடன் நடந்து சுவாமியபிஷேகத்துக்கும் நைவேத்யத்துக்கும் பால் கட்டளை நடக்கிறது.

5. ஷையாரால் அர்த்தஜாமக் கட்டளை நடத்தி 4 தேசாந்திரிகட்குப் பிரசாதம் கொடுக்கப்பட்டு வருகிறது.

பிரமோற்சவம்: வைகாசி (பௌணர்மி) விசாக தீர்த்தம், அதற்கு முன் பத்துநாள் உற்சவம்.

## நிர்வாகம்.

1. P. சுப்பையா முதலியாரவர்கள், மானேஜிங் டிரஸ்டி.
2. K. V. திருவேங்கட முதலியாரவர்கள், டிரஸ்டி.
3. A. ராஜப்பா முதலியாரவர்கள், டிரஸ்டி.

தலபுராணம்: வடமொழியில் ஒன்றுண்டு.

மற்ற ஆலயங்கள்: 1. பெருமாள், 2. கைலாசநாதர், 3. காளியம்மன், 4. அங்காளம்மன், 5. சாஸ்தா.

உ

திருச்சிற்றம்பலம்

## திருப்பூவனூர்

## திருநாவுக்கரசு நாயனார் தேவாரம்.

பூவனூர்ப் புனிதன்றிரு நாமந்தான்
நாவினூறு நூறாயிர நண்ணினார்
பாவமாயின பாறிப் பறையவே
தேவர் கோவினுஞ் செல்வர்களாவரே. 1

என்னனென் மனை யெந்தை யெனாருயிர்
தன்னன் றன்னடியேன் றனமாகிய
பொன்னன் பூவனூர் மேவியபுண்ணியன்
இன்ன னென்றறிவொண்ணா னியற்கையே. 2

குற்றங்கூடிக் குணம்பல கூடாதீர்
மற்றுந்தீவினை செய்தன மாய்க்கலாம்
புற்றராவினன் பூவனூ ரீசன்பேர்
கற்றுவாழ்த்துங் கழிவதன் முன்னமே. 3

ஆவின்மேவிய வைந்தமர்ந் தாடுவான்
தூவெண்ணீறு துதைந்தசெம் மேனியான்
மேவநூல்விரி வெண்ணியின் றென்கரைப்
பூவனூர்புகு வார்வினை போகுமே 4

புல்லமூர்தியூர் பூவனூர் பூம்புனல்
நல்லமூர்த்தி நல்லூர் நனிபள்ளியூர்
தில்லையூர் திருவாரூர் சீர்காழி நல்
வல்லமூரென வல்வினை மாயுமே. 5

அனுசயப்பட்டது விது வென்னாதே
கனிமனத் தொடுகண்களு நீர்மல்கி
புனிதனைப் பூவனூரனைப் போற்றுவார்
மனிதரிற் றலையான மனிதரே. 6



ஆதிநாத னமரர்க ளர்ச்சிதன்
வேதநாதன் வெற்பின் மடப்பாவையோர்
பாதியானான் பரந்த பெரும்படைப்
பூதநாதன் றென்பூவ னூர்நாதனே. 7

பூவனூர்தண் புறம்பயம் பூம்பொழில்
நாவலூர் நள்ளாறு நன்னிலங்
கோவலூர் குடவாயில் கொடுமுடி
மூவலூருமக் கண்ணனூர் காண்மினே. 8

எவமேது மிலாவமணே தலர்
பாவகாரிகள் சொல்லைப் பட்டுநான்
தேவதேவன் திருநெறி யாகிய
பூவனூர் புகுதப்பெற்ற நாளின்றே. 9

நாரணன் னொடுநான்முக னிந்திரன்
வாரணன் குமரன் வணங்குங் கழல்
பூரணன் றனைப்பூவனூர் மேவிய
காரணன் னெனையாளுடைக் காளையே. 10

மைக்கடுத்த நிறத்தரக் கன்வரை
புக்கெடுத்தலும் பூவனூ ரன்னடி
மிக்கடுத்த விரல்சிறி தூன்றலும்
பக்கடுத்த பின்பாடியுய்ந் தானென்றே. 11

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராணம் — திருஞானசம்பந்தர் புராணம்.

பழுதில் சீர்திருப்பரிதி நன்னியமும் பணிந்தங்
கெழுது மாமறையாம்பதி கத்திசைபோற்றி
முழுதுமானவர் கோயில்கள் வணங்கியே முறைமை
வழுவில் சீர்திருப்பூவனூர் வணங்கிவந் தணைந்து
(பெரியபுராணம் 375)

## உமாபதி சிவாசாரியார் அருளிச்செய்த
## திருப்பதிகக் கோவை.

பள்ளியின்முக் கூடறிரு விரும்பூளை யாவூர்ப்
பசுபதீச் சரம்பாலைத் துறைபரிதி நியமங்
கள்ளில்குரங் கணின்முட்டந் திருமுருகன் பூண்டி
கஞ்சனூர் கச்சிநெறிக் காரைக்கா டோத்தூர்
புள்ளமங்கை நாட்டியத்தான் குடிகலைய நல்லூர்
புக்கொளியூ ரவிநாசி பூவனூர் துறையூர்
கொள்ளிக் காடிடைச்சுரமச் சிறுபாக்கம் விளமர்
கொட்டையூர் கொடுங்குன்றங் கூடலையாற்றூரே.

மேலாகும் விளமர்கா வீரம்பெரு வேளூர்
மிளிர்தலையா லங்காடு குடவாயில் சேறை
நாலூர்ம யானங்கடு வாய்க்கரைப் புத்தூர்
நவிலமிரும் பூளைதிரு வரதைப் பெரும்பாழி
மாலூரு மவளிவணல் லூர்பரிதி நியமம்
வாழ்வெண்ணி பூவனூர் பாதளீச் சரமீர்ச்
சேலூருந் திருக்களர்சிற் றேமமுசாத் தானந்
திருவிடும்பாவனத்தோடு சேர்ந்த கடிக்குளமே


உமாபதி சிவாசாரியார் அருளிச்செய்த
சிவக்ஷேத்ர சிவநாமக் கலிவெண்பா.

—போதமிகு
பூவணூர் கற்பகத்தைப் புல்லுகின்ற புட்பவனத்
தேவனே தேவ சிகாமணியே.

திருச்சிற்றம்பலம்.

112893

B. ... P.I C. 161 Or. No. ...074 C. 400.



திருக்கோயிலின் மேல் தோற்றம்.

१३-३-९४